எடுக்கும் தொழில் இப்போது நலிந்து போனதற்குக் காரணம் என்ன? ஜப்பானில் செயற்கை முத்துக்களைத் தயார் செய்ய சிப்பிகளுக்கு ஊசிமருந்து செலுத்துகிறார்களே அதுபோன்ற மருந்துகளை தமிழக அரசும் பயன்படுத்த முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற அந்த பெருமையும், புகழும் தமிழகத்திற்கு இன்றும் உள்ளது இன்றும் ஆஸ்திரேலிய, ஜப்பான் போன்ற இடங்களிலிருந்து தமிழக முத்துக்களை பெரும் அளவில் வங்கிச் செல்லுகிறார்கள். ஜப்பானில் செயற்கை முத்துக்கள் தயார் செய்யப்படுகின்றன என்றாலும், அவைகள் அவ்வளவு தரமானதாக இல்லை. சீக்கிரம் நசிந்து விடுகின்றன, கடல் கொல்லுயூஷன் போன்ற சில காரணங்களால் உற்பத்தி செய்யும் தன்மையும் குறைந்து விடுகிற நிலைமை அங்கேயிருக்கிறது. ஆகையினால் அவர்கள் இங்கேயிருந்துதான் பெரும் அளவில் முத்துக்களை வாங்குவதை விரும்புகிறார்கள்.

அதனால்தான் நாம் இருக்கின்ற வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டு இயற்கை முத்துக்களை எடுப்பதற்கு முயற்சி செய்து வருகிறோம். முயன்ற அளவில் செயற்கை முத்துக்களையும் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம். அந்த முறைகள் வெற்றிப் பெறும் என்கிற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. விரைவில் அந்தப் பணிகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்போம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் மேலவை செல்ல வேண்டியிருப்பதால் அவருடைய வேண்டுகோளுக்கிணங்க அவரது வினாக்கள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

தாளவாடி மலைப்பகுதியிலுள்ள நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கும் திட்டம்.

*வினா எண். 114— திரு. ஆர். ரங்கசாமி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சத்தியமங்கலம் தொகுதி தாளவாடி மலைப்பகுதியில் மேற்கு நோக்கிச் செல்லும் பள்ளத்தாக்குகளை தடுத்து அங்குள்ள நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்மிபுகு திரு. சே. இராஜாமுகமது;— (அ) மற்றும் (ஆ) நான்கு நீர்ப்பாசனத் திட்டங்கள் ஆய்வு நிலையில் உள்ளன. மதிப்பீடுகள் தயார்செய்து, சாத்தியமுள்ள திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தலைமைப் பொறியாளர் (பாசனம்) தெரிவித்துள்ளார்.

[முற்பகல் 9.10]

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: அந்தத் திட்டங்கள் எந்தக் காலத்திற்குள் எடுத்து முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு கே. இராஜாமுகமது: நான்கு திட்டங்களை இப்போது தான் ஆய்வு செய்துக் கொண்டிருக்கிறார்கள், ஆய்வு அறிக்கை வந்த பிறகு தான் எந்தத் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரியும். அதற்குப் பிறகுதான் கால நேரத்தை நிர்ணயிக்க முடியும்.

திரு. தி. கா. நல்லப்பன்: அமைச்சர் அவர்கள் நான்கு திட்டங்கள் ஆய்வில் உள்ளதாகச் சொன்னார்கள். அந்த நான்கு திட்டங்கள் எவை எவை என்று அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு கே. இராஜாமுகமது: தொட்டஹள்ள நீர்த் தேக்கத் திட்டம், பெலஹள்ளா நீர்த் தேக்கத் திட்டம், சிக்ஹோளி நீர்த் தேக்கத் திட்டம், மல்லன்குளி நீர்த் தேக்கத் திட்டம். இந்த நான்கு திட்டங்களும் இப்போது ஆய்வு நிலையில் இருக்கின்றன.

தடப்பள்ளி வாய்க்காலில் தூர் எடுக்கும் பணி

*வினா எண் 115—திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) பவானிசாகரைச் சார்ந்த தடப்பள்ளி வாய்க்கால் நீண்டகாலமாக தூர் எடுக்கப்படாமல் இருப்பதால் கடைகோடியிலுள்ள விவசாயிகளுக்கு பாசன நீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தூர் எடுக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) மற்றும் (ஆ) பவானிசாகரைச் சார்ந்த தடப்பள்ளி வாய்க்காலில் தூர் எடுக்கும் பணிகள் தொடங்கப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது.

பாலாபுரம் கிராமத்தில் புதிய ஏரி அமைக்கும் திட்டம்

*வினா எண். 116— திரு. பூ. மு. நாசிம்மன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) செங்கை மாவட்டம், பள்ளிப்பட்டு தொகுதியைச் சேர்ந்த பாலாபுரம் கிராமத்திற்கு புதிய ஏரி அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது எடுத்துக் கொள்ளப்படும்